ARTICLE 01 · கட்டுரை 01 | சங்க இலக்கியமும் தமிழர் வாழ்வியலும்
Special Issue · Vol. 10, No. 03 (October 2026) · pp. 1–8

# நற்றிணையில் மனைமருட்சிப் பாடல்கள்

*Manaimarutchi Poems in Natrinai*

**முனைவர் கு. வடிவேல்முருகன்**
உதவிப் பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 019, தமிழ்நாடு, இந்தியா
***Dr. G. Vadivelmurugan**, Assistant Professor & Head, Department of Tamil (SFC), Urumu Dhanalakshmi College, Tiruchirappalli – 620 019, Tamil Nadu, India*
**மின்னஞ்சல்:** vadivelmurugantnj@gmail.com · **ORCID:** https://orcid.org/0000-0002-6549-2232

## ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியத்தில், தலைவனுடன் உடன்போக்குச் சென்ற தலைவி தன் குடும்பத்தைவிட்டுப் பிரிந்த நிலை, அவளுடைய நற்றாயின் ஆழ்ந்த உணர்வுகளின் வழியாகச் சித்திரிக்கப்படுகிறது. அன்பிலும் அரவணைப்பிலும் வசதியிலும் செல்வச் செழிப்பிலும் வளர்ந்த தலைவி, தன் இல்லத்தைவிட்டுத் தலைவனுடன் கடினமான பாலை நிலத்தின் வழியே செல்கிறாள். மகளின் இளமை, விளையாட்டுத் தன்மை, இல்லத்தில் அவள் வாழ்ந்த வசதியான வாழ்க்கை, பயணத்தில் அவள் எதிர்கொள்ளக்கூடிய துன்பங்கள் ஆகியவற்றை எண்ணி நற்றாய் பெரிதும் கவலையுற்று வருந்துகிறாள். மகளைப் பற்றிய நினைவுகளும் அவளுடைய பாதுகாப்பு, நலன் குறித்த அக்கறையும் தாயன்பின் ஆழத்தையும் பிரிவுத் துயரையும் வெளிப்படுத்துகின்றன. நற்றாயின் இவ்வுணர்வு நிலை ‘மனைமருட்சி’ என்னும் கருத்தாக்கத்தின் வழி வெளிப்படுகிறது. நற்றிணையின் உடன்போக்குப் பாடல்களுள் அமைந்த மனைமருட்சிப் பாடல்களில் சித்திரிக்கப்படும் நற்றாயின் மனநிலையையும் உணர்வு நிலையையும் இவ்வாய்வு ஆராய்கிறது. தாயன்பு, பிரிவு, மகளைப் பற்றிய நினைவுகள், அவளுடைய பயணம் குறித்த பதற்றம், அவளுடைய எதிர்கால நலன் குறித்த அக்கறை ஆகியவற்றை இவ்வாய்வு மையமாகக் கொள்கிறது.

**திறவுச்சொற்கள்:** அகத்திணை; சங்கக் காதலர்; தொல்காப்பியம்; நற்றிணை; மனைமருட்சி

## Abstract

In Sangam literature, the separation of the heroine from her family after she leaves with the hero is portrayed through the deep emotions of Natrai, the heroine’s mother. The heroine, who has grown up with love, care, comfort, and prosperity, leaves her home and travels with the hero through the difficult Palai landscape. Thinking about her daughter’s young age, playful nature, comfortable life at home, and the hardships she may face on the journey, Natrai becomes deeply worried and distressed. Her memories of her daughter and her concern for her safety and well-being reveal the depth of maternal love and the pain of separation. This emotional state of Natrai is expressed through the concept of ‘Manai Marutchi’. The present study examines the mental and emotional state of Natrai as portrayed in the Manaimarutchi poems found among the Udanpokku poems in Natrinai. The study focuses on maternal love, separation, memories of the daughter, anxiety about her journey, and concern for her future well-being.

**Keywords:** Agathinai; Sangam Lovers; Tholkapiyam; Natrinai; Manaimarutchi

## முன்னுரை

அகம், புறம் என்ற இரண்டு பாடுபொருள்களையும் உள்ளடக்கியது சங்க இலக்கியம். இவற்றுள், அகப்பொருளின் பிரிவுகளான களவு மற்றும் கற்பு என்ற

இரண்டனுள் களவொழுக்கத்தின் நிறைவுப் பகுதியாக விளங்குவது உடன்போக்காகும். தலைவனும் தலைவியும் இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், வரைதல் வேட்கை, வரைவு கடாதல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிவு போன்ற சூழல்களை அடுத்து, தோழி தலைவனைப் பற்றிச் செவிலியிடம் அறத்தொடு நின்று மணம் புரிவிப்பது நிகழும். மாறாக, தலைவியின் இல்லத்தினர் தலைமக்களுக்குத் திருமணம் செய்விக்க உடன்படாத நிலையில் அவ்வறத்தொடு நிற்றலின் இறுதிநிலையாக உடன்போக்கு நிகழும். முதலில் தலைவி இச்செயலுக்கு நாணமடைந்தாலும் பின்னர் உடன்பட்டு, பாலை நிலத்து வழியாக இருவரும் செல்வர். உடன்போக்கு மேற்கொண்ட அத்தலைமக்களைத் தேடி அவர்கள் சென்ற பாதையில் செவிலி தேடிச்செல்பவளாகவும், நற்றாய் மனையின்கண் இருந்து புலம்புவதாகவும் பெரும்பான்மையான சங்க இலக்கியப் பாடல்கள் அமைகின்றன.

குழந்தைப் பருவ விளையாட்டுப் பண்புகள் மாறாதவளாகவும், செல்வச் செழிப்புடன் வளர்க்கப்பட்டவளாகவும் விளங்கிய தலைவி, தன் பிறந்தகத்தின் வளமான வாழ்வையும் அன்புச் சூழலையும் மறந்து தலைவனுடன் உடன்போக்குச் சென்றுவிட்டதை அறிந்த நற்றாயின் உள்ளம் மருண்டு கலங்குகிறது. இளமைப் பருவத்திலேயே தன் மகள் பிறந்தகத்தின் செல்வச் செழிப்பையும் சுகவாழ்வையும் துறந்து, தலைவனுடன் கொடிய பாலைநில வழியில் செல்வதை எண்ணி நற்றாய் பெரிதும் வருந்துகிறாள். மகளின் இளமை, விளையாட்டுத் தன்மை, தாயன்பில் வளர்ந்த நிலை ஆகியவற்றை நினைவுகூர்ந்தவாறே, அவளது பிரிவைத் தாங்க இயலாமல் மனையின்கண் இருந்து புலம்பும் நிலையே ‘மனைமருட்சி’ எனப்படுகிறது. நற்றிணையில் இத்துறை, தலைவி தலைவனுடன் உடன்போக்குச் சென்ற பின்னர் மகளின் பிரிவைத் தாங்க முடியாத நற்றாயின் மனக்கலக்கத்தையும் ஏக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. அவ்வகையில் நற்றிணையில் அமைந்த உடன்போக்குப் பாடலுள் மனைமருட்சிப் பாடல்களில் வரும் நற்றாயின் மனநிலையை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## மனைமருட்சி

பாலை ஒழுக்கத்தில் தனித்துவம் வாய்ந்ததொரு துறையாகிய உடன்போக்குப் பற்றிய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை ஆகிய நூல்களில் உள்ளன. அவற்றுள், இவ்வுடன்போக்குப் பற்றிய பாடல்களில் கூற்று நிகழ்த்துபவர்களாகத் தலைவன், செவிலி, நற்றாய், கண்டோர் ஆகியோர் அமைகின்றனர். இவர்களுள், நற்றாய் கூற்றில் வரும் பாடல்கள் மட்டும் நற்றிணையில் ‘மனை மருட்சி’ என்று பெயர் பெறுகின்றன.

## மனைமருட்சி - பெயர்க்காரணம்

தலைவி இல்லத்தில் செல்ல - செல்வ மகள். பால் மணம் மாறாக் குழந்தை என்பதுபோல் விளையாட்டுப் பண்புகள் மாறாதவள். மிகவும் சிறுமி. செவிலியும் தாயும் தேனோடு தீம்பால் உண்ண ஊட்டியும் உண்ணாதவள். குச்சியால் மிரட்டி உண்ண வைக்கப்படும்போதும் ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி. தாயின் கை அணைப்பிலிருந்து சிறிது நெகிழ்தற்கும் அழுகின்றவள் நேற்றுவரை. இன்று அந்த வளமனை மறந்து காளை ஒருவன் பொய்மொழிக்கு (காதல் மொழிக்கு) மயங்கிச் சென்றுவிட்டமையை அறிந்தபோது தாயின் மனை மருண்டுபோனது. மிகுந்த இளமைத் தன்மையுடைய தன் மகள் தன் பிறந்தகத்தின் செல்வச்

சூழல்களையெல்லாம் விட்டுவிட்டு, தலைவனோடு கொடிய பாலை வழியில் செல்லும் நிலைகளை எண்ணி வருந்தி, மனையின்கண் மருண்டுப் புலம்புவதாக அமைவதே மனைமருட்சிப் பாடல்களாகும். மனையில் இருந்துகொண்டு வருந்துதல் என்பதே மனைமருட்சி என்பதன் பொருளாகும்.

## நற்றிணையில் மனை மருட்சி

நற்றிணையில் உடன்போக்குப் பற்றிய 23 பாடல்களுள் (2. 9, 10, 12, 29, 66, 76, 110, 143, 149, 162, 179, 184, 198, 202, 264, 271, 279, 293, 305, 324, 362, 384) நற்றாய் பாடியது பத்துப் பாடல்களாகும். அதனுள், ஆறு பாடல்கள் (66, 110, 143, 179, 184, 305) மனை மருட்சி என்று பெயரில் அமைகின்றன. இரண்டு பாடல்கள் (271, 293) ‘தாய் மனை மருண்டு சொல்லியது’ என்றும், ஏனைய இரு பாடல்கள் (29, 279) மனை மருட்சி என்ற பெயரில் இடம்பெறாமல் ‘மகட்போக்கிய தாய் சொல்லியது’ என்ற குறிப்புடனும் காணப்படுகின்றன.

உடன்போக்குத் துறையில் செவிலி கூற்றாகவும் நற்றாய் கூற்றாகவும் பாடல்கள் இடம்பெறினும் மனை மருட்சி என்ற பெயரில் வேறு எந்த நூலிலும் பாடல்கள் இடம்பெறவில்லை. எனினும், மனைமருட்சிப் பொருளுடைய பாடல்கள் சில உள்ளன. அகநானூற்றில் மூன்று பாடல்களும் (105, 207, 275), ஐங்குறுநூற்றில் சில பாடல்களும் (371, 376) உள்ளன. குறுந்தொகையில் உடன்போக்குப் பற்றிய பாடல்கள் நற்றாய் கூற்றில் இன்றிக் கண்டோர், செவிலி கூற்றுகளில் மட்டுமே உள்ளன. கலித்தொகையில் உடன்போக்குப் பற்றி ஒரேயொரு பாடல் (பாலைக்கலி 9) மட்டுமே உள்ளது. அது, மகட்போக்கிய பாலைக்கண் செவிலி கூற்றில் உள்ளது.

## தலைவன் மீது வருத்தம்

மகளின் உடன்போக்கு அறிந்து புலம்பும் நற்றாயின் கூற்று ஒரு தாயின் மனவோட்டத்தையும் எண்ணம் மற்றும் பல்வேறு நினைவுகளையும் வெளிப்படுத்துகின்றன. தன் மகள் மீது குறை சொல்லத் துணியாமல் தன் மகளை தன் இல்லத்திலிருந்து அழைத்துச் சென்ற தலைவன் மீது குறை சொல்கிறாள். தலைவனின் செயலை அவளால் நியாயமாக ஏற்கவில்லை. தலைவன் தன் மகளை ஏமாற்றி அழைத்துச் சென்றுவிட்டதாகவே கருதுகிறாள்.

தாயும் செவிலியும் நேற்றுக்கூடத் தேனொடு கலந்த தீம்பால் அருந்துக என்று ஊட்டவும் உண்ணாமல் விம்மி அழுதவள் இன்று ஒரு காளையினுடைய பொய்மொழியையே தனக்குப் பற்றுக்கோடாகக் கொண்டு, செல்லுதற்கரிய சுரத்தின்கண்ணே சென்றொழிந்தவள் என்று கூறுகிறாள்.

> “இன்றே மையணற் காளை பொய்புகலாக
> அருஞ்சுரும் இறந்தனள் என்ப தன்
> முருந்தேர் வெண்பல் முகிழ்நகை திறத்தே”

(நற்றிணை.179)

இன்னொரு பாடலில் தன் மனையிலிருந்து மகளை வன்கண்மையடைய ஒரு காளை வற்புறுத்தி, சம்மதிக்க வைத்து அழைத்துச் சென்றுவிட்டதாகக் கூறுகிறாள். இதனைக் கயமனார் கூறும்போது,

"..................................................எம்மில்,
பொம்மல் ஓதியைத் தன்மொழிக் கொளீஇ
கொண்டு உடன்போக வலித்த
வன்கண் காளை..."

(நற்றிணை.293)

என்கிறார். மற்றுமொரு பாடலிலும்,

"செழுந்தண் மனையொடு எம்மிவண் ஒரியச்
செல்பெருங் காளை பொய் மருண்டு"

(நற்றிணை.271)

எனத் தலைவன் கூறிய, அளவினைக் கடந்த பொய்யில் மயங்கியே தன் மகள் காதலுடன் சென்றுவிட்டதாகக் கருதுகிறாள். அகநானூற்றிலும் நற்றாய் கூற்றாக வரும் பாடலிலும் தலைவன் தன் மகளைப் பொய்யாகப் பாராட்ட, அதை மெய்யென்று நம்பி அவள் மயங்கினாள் என்று தாய் கூறுவதாகத் தாயங்கண்ணனார் கூறுகிறார்.

"மெல்லென, நல்வரை நாடன் தற்பா ராட்ட,
...பொய் மருண்டு"

(அகநானூறு.105)

ஐங்குறுநூற்றுப் பாலைத்திணையில், மனை மருட்சி என்பதற்கு இணையாக ஒரு பத்து வைக்கப்பட்டிருக்கிறது. அது 'மகட்போக்கிய தாய் இரங்கு பத்து' என்பதாகும். இப்பத்தின் முதல் பாடலில் மட்டும் தன் மகள் எடுத்த முடிவு சரியே என்றும் அது அறநெறிப்பட்டது என்றும் நற்றாய் கூறுகிறாள்.

"அறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய கானே"

(ஐங்குறுநூறு.371)

இம்முதற்பாடல் தவிர்த்து ஏனைய ஒன்பது பாடல்களிலும் நற்றாயின் உள்ளக் குமுறல் மிக அழகாக வெளிப்பட்டிருக்கிறது.

## மகளின் முடிவுக்கு வருந்துதல்

நற்றாய் தன் மகள் மிகவும் இளமையுடையவள், தேகை மயங்கினும் குறுந்தொடி நெகிழினும் காழ்பெய் அல்குல் காசுமுறை திரியினும் தன்னுடைய அழகுநலன் கெட அழுகிறாள். அப்படிப்பட்ட பேதைமையுடைய தன் மகள் தலைவனுடன் செல்ல எடுத்த முடிவு தெளிவானதல்ல. புறா, தின்னத் தகாத காயைத் தன் அறியாமையினாலே தின்ற பின் கிளை மேலேறி மயக்கமற்று வருந்தியிருப்பதுபோல, தன் மகள் ஏதிலானது மாய இன்பத்தினை நன்றென எண்ணிச் சென்று, பின் தன் தவறுக்கு வருந்துவாளோ என்று நற்றாய் வருந்துகிறாள். இதனை,

"புன்புறா உயவும் வெந்துகள் இயவின்
நயந்த காதலற் புணர்ந்நனள் ஆயினும்,
சிவந்து ஒளிமழுங்கி அமர்த்தனகொல்லோ"

(நற்றிணை.66)

என்னும் இனிசந்த நாகனாரின் பாடலால் அறியலாம்.

## சுற்றிச் சுழலும் உள்ளம்

தலைவனும் தலைவியும் உடன்போக்கினை மேற்கொண்டனர். தலைமக்கள் சென்ற வழியானது நிழல் இல்லாது கொடிய அழல் என்னும் வெப்பக் காற்று

வீசக்கூடியது. ஆண் புலி தனது பெண் புலியின் பசியினைப் போக்க அவ்வழிச் செல்வோரைக் கொல்லும்பொருட்டு நோக்கியிருக்கும் கொடுமை மிக்கது. அத்தகைய வழியில் தலைவி எவ்வாறு நடந்து செல்வாள் என்று நற்றாயின் உள்ளம் கவலை கொள்கிறது. இதனை,

> “நின்ற வேனில் உலந்த காந்தள்
> அழலவிர் நீளிடை, நிழலிடம் பெறாஅது
> ஈன்றுகான் மடிந்த பிணவுப்பசி கூர்ந்தென
> மான்ற மாலை வழங்குநர்ச் செகீஇய
> புலிபார்த்து உறையும் புல்லதர்ச் சிறுநெறி
> யாங்கு வல்லுநள் கொல்தானே”

(நற்றிணை.29)

என்ற பூதனாரின் மகட்போக்கிய தாய் சொல்லியதாக அமையும் பாடல் புலப்படுத்துகிறது. நற்றாயின் உள்ளமானது தலைவி செல்லும் பாலை நிலத்தை எண்ணிப் பார்க்கின்றது. நற்றாயின் உடல் மனையின்கண் இருக்க அவளது உள்ளம் பாலை நிலத்தில் செல்லும் தலைவியையே சுற்றிச் சுழலுவதை அறிய முடிகின்றது. தலைவி தன்னைப் பிரிந்து சென்றாலும் தன்னால் அவளை மறக்க முடியவில்லையே என்று நற்றாய் புலம்பியதன்வழி அவளது பாசப்பிணைப்பும் நன்கு வெளிப்படுகின்றது.

## தன் அலட்சியப் போக்குக்கு வருந்துதல்

நற்றாய் தன் நிலைக்கும் வருந்துகிறாள். இவ்வூர்ப் பெண்டிர் ஒருசேர தலைவியைக் குறித்து அலர் கூறியபோது, யாதொன்றையும் அறியாதவள்போல மூச்சுவிடாது இருந்திருக்கிறாள் நற்றாய். காரணம், பிறர் தன் மகள்மீது கூறிய பழியை நம்புவதற்கும் அவள் அப்பாற்பட்ட சிறுமியாய் இருந்திருக்கிறாள்; அல்லது, நற்றாயின் பார்வைக்குத் தெரிந்திருக்கிறாள். பின்னும் மகள்மீது அலர் அதிகமானபோது அவள் தன் மகளிடம், ‘உன் கூந்தலில் தற்போது புதிய மணம் கமழ்கிறதே. அதற்கு என்ன காரணம்’ என்று கேட்டபோது, தகுதியான பதில் தலைவியிடமிருந்து வரவில்லை. அப்போதும் தான் விழித்துக் கொண்டு அவளைப் பாதுகாக்கத் தவறிவிட்டேன் என்று புலம்புகிறாள்.

> “அம்பல் மூதூர் அல்வாய்ப் பெண்டிர்
> இன்னா இன்னுரை கேட்ட சின்னாள்
> அறியேன் போல உயிரேன்
> நறியநாறு நின்கதுப் பென்றேனே”

(நற்றிணை.143)

என்று தன் மகளைப் பாதுகாவாத தானே குற்றமுடையவள் என்று வருந்துகிறாள். இங்கு ஒரு தாயின் மனப்போராட்டம் தெளிவாக விளங்குகிறது.

## பிறர் பேச்சுக்கு வருந்துதல்

தன் மகள் உடன்போக்குச் சென்றமையால் தாய் அழுது புலம்புகிறாள். அப்போது அவளிடம் வந்து பேசும் பிறர்மீதும் வருத்தம் அடைகிறாள். அயல்வீட்டுப் பெண்டிர் வந்து அவளிடம் உன் மகள் செயல் அறத்தின் பாற்பட்டதுதான். எனவே, அதற்கு வருந்த வேண்டாம் என்று கூறியபோது,

“ஒருமகள் உடையேன் மன்னே அவளும்
செருமிகு மொய்ம்பிற் கூர்வேற் காளையொடு
பெருமலை அருஞ்சுரம் நெருநற் சென்றனள்…
அணிஇயற் குறுமகள் ஆடிய
மணியேர் நொச்சியும் தெற்றியும் கண்டே”

(நற்றிணை.184)

என்கிறாள். நான் உங்களைப் போன்று பல பெண்களைப் பெறவில்லை. அவளும் நேற்றுச் சென்றுவிட்டாள். அவள் போனதும் அவளோடு நான் கொண்ட ஆசையும் போனது. இருப்பினும், என் வீட்டுத் திண்ணையில் அவள் விளையாடிய விளையாட்டுக்களை எப்படி மறப்பேன்? இதை எண்ணும்போது என் நெஞ்சு வேகின்றது என்று வருந்தும் ஒரு தாயின் உளவியல் ரீதியான மனத்தின் பாதிப்பு வெளிப்படுகிறது. இதேபோல், தலைவி உடன்போக்குச் சென்றதும் அயல் பெண்டிர்கள் வந்து நற்றாயை ஆற்றுவிக்கையில், தலைவி மணல்வீடு கட்டி விளையாடியதையும் அச்சுவடுகளையும் நற்றாய் காட்டிப் புலம்பி வருந்துவதாக அகநானூற்றுப் பாடலும் (275) குறிப்பிடுகிறது.

## தன்னையும் பிறரையும் சபித்தல்

மகள் பிரிவால் வருத்தத்தின் எல்லையை அடையும்போது நற்றாய் தன்னையும் பிறரையும் சபிக்கத் தொடங்கிவிடுகிறாள். அயலார் கூறிய அலர்கேட்டு தாங்கப் பொறாதவளாய் மனையிலிருந்த நற்றாய் மயங்கி, இத்தகைய பழிமொழிகளைக் கேட்பதற்குமுன் என்னைப் பெரிய தாழியிலிட்டுக் கவிக்கும்படி என் உயிரைக் கொண்டு போகாத கூற்றும், தான் வலியழிந்து அதை அத்தாழியிலிட்டுக் கவிக்கும்படி இறந்து ஒழியட்டும் என்று தன்னையும் கூற்றையும் சபிக்கிறாள்.

“மாயிருந் தாழி கவிப்பத்
தாவின்று கழிக, எற்கொள்ளாக் கூற்றே”

(நற்றிணை.271)

அதுபோன்று, தான் மனைக்கண் இருந்து வருவதுபோல, தன் மகளைத் தலைவனுடன் செல்வதற்கு ஊக்கிய தீவினையும் காட்டிடையே நின்று அதன்கண் தோன்றிய தீயிடைப்பட்டு எரிந்தொழிக என்னும் நற்றாயின் மனநிலையை ஐங்குறுநூற்றுப் பாடல் (376) குறிப்பிடுகின்றது.

தன் மகளை உடனழைத்துச் சென்ற காளையின் தாயும் தன்னைப்போன்று, இத்தகைய கொடிய புதல்வனை ஈன்றதனாலே அவள் பெரிய நடுக்கமுற்றுத் துன்பம் அடைந்து ஒழிவாளாக என்பதனைப் பின்வரும் கயமனார் பாடலால் அறியலாம்.

“பொம்மல் ஓதியைத் தன்மொழிக் கொளீஇ
கொண்டுடன் போக வலித்த
வன்கண் காளையை ஈன்ற தாயே”

(நற்றிணை. 293)

இதனைப்போன்றே ஐங்குறுநூற்று நற்றாயும்,

“நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக…
வெஞ்சுரம் என்மகள் உய்த்த
அம்பமை வல்வில் விடலை தாயே”

(ஐங்குறுநூறு.373)

என்று காளையின் தாயைச் சபிக்கிறாள்.

## இழந்ததற்கு வருந்துதல்

ஒரு மகளைப் பெற்ற தாய் தன் மனையின்கண் காண விரும்பும் மிகப்பெரிய இன்பம் தன் மனையில் நிகழும் மகளின் திருமண நிகழ்வாகும். மகள் உடன்போக்குச் சென்றுவிட்டமையால் தன் மகள் திருமணத்தைக் காண இயலாத ஏக்கத்தை வெளிப்படுத்துகிறாள். அதோடு திருமணத்திற்குப் பின் நிகழும் சிலம்பு கழித்தல் விழா நிகழ்ச்சியைக்கூடத் தனக்குக் காணக் கொடுத்து வைக்கவில்லையே. அதுவும் பிறர் கண்டு மகிழச் சென்றுவிட்டதே என்று வருந்துகிறாள்.

> சிலம்பு கழீஇய செல்வம்
> பிறருணக் கழிந்த என் ஆயிழை அடியே
>
> (நற்றிணை.293)

ஆகவே, மனைமருட்சிப் பாடல்களில் தலைவியின் இளமை, அவள் இல்லத்தின் செழுமை, தலைவியின் இல்லப் புறக்கணிப்பு, நற்றாய் தலைவன் உள்ளிட்ட பிறர்மீது கொள்ளும் சினம், அவள் வருத்தம் ஆகியவை புலம்பல் வடிவில் வெளிப்பட்டுள்ளன.

தலைவி முழுமனதோடே தலைவனுடன் உடன்போக்குச் சென்றபோதிலும், தலைவன் தன் மகளை ஆசை வார்த்தைகள் கூறி ஏமாற்றி அழைத்துச் சென்றுவிட்டதாகவே நற்றாய் கூறுகிறாள். இது தன் மகள் மீதான அன்பு மற்றும் நம்பிக்கையின் வெளிப்பாடாகவே கருதலாம். மேலும், தான் உணர்ந்த துன்பத்தைத் தலைவனின் தாயும் அடைய வேண்டும் என்று எண்ணுவது தம் வேதனையின் வெளிப்பாடாகவே அமைகிறது.

## நிறைவுரை

மனைமருட்சிப் பாடல்கள் என்ற சொல்லாட்சி நற்றிணையைத் தவிர ஏனைய நூல்களில் இல்லை. களவிலும் கற்பிலும் செவிலிக்கூற்று அமைந்தாலும் நற்றாய் கூற்று, கற்பில் மட்டுமே அமைகிறது. நற்றாய் இல்லம் விட்டு வெளியே சென்று தலைவியைத் தேடவியலாது, மனையில் இருந்து மருண்டு புலம்புவதையே நற்றிணை மனைமருட்சி என்கிறது என்பதை உணர முடிகிறது. நற்றாய் தலைவனின் செயலை நியாயமுடையதாகவும் கருதவில்லை. தலைவியின் முடிவும் தாயால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அனைத்து மனைமருட்சிப் பாக்களிலும் தலைவி விளையாட்டு மனம் மாறாத சிறுமி என்று கூறப்பட்டிருப்பதால் அவள் இல்லறம் நடத்துதற்குரிய திறன் அமையப் பெற்றவளோ? என்ற ஐயமும் அதுகுறித்த வினாவும் நமக்கு எழுகிறது. அக்காலத்திலும் உடன்போக்கு என்பது அரிதான நிகழ்வாகவே இருந்திக்க வேண்டும். எனவேதான், நற்றாயின் வருத்தம் புலம்பலாக வெளிப்பட்டிருக்கிறது.

## துணைநூற் பட்டியல்

1. தொல்காப்பியப் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை. மே 2005
2. நற்றிணை, அ. நாராயணசாமி ஐயர் (உ.ஆ.), தி.தெ.சை.சி.நூ.கழகம், சென்னை. 1956
3. கலித்தொகை, நச்சினார்க்கினியர் (உ.ஆ.), தி.தெ.சை.சி.நூ.கழகம், சென்னை. 1958
4. குறுந்தொகை, மு. சண்முகம்பிள்ளை (ப.ஆ.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1974
5. நற்றிணை மூலமும் விளக்கவுரையும், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை - 17. 1968
6. சங்க இலக்கியம், எஸ். வையாபுரிப்பிள்ளை, பாரி நிலையம், சென்னை. 1967

7. சங்க இலக்கியம் அகநானூறு (3 தொகுதிகள்), அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. 1999
8. சங்க இலக்கியம் ஐங்குறுநூறு (2 தொகுதிகள்), அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. 1999
9. கலித்தொகை, நச்சினார்க்கினியர், (உ.ஆ.), தி.தெ.சை.சி.நூ.கழகம், சென்னை. 1958
10. பரிபாடல், பொ.வே. சோமசுந்தரனார், தி.தெ.சை.சி.நூ.கழகம், சென்னை.
11. நற்றிணை நானூறு, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், தி.தெ.சை.சி.நூ.கழகம், 1956

## References

1. Tolkappiyam – Porulatikaram, Ilampuranar (Commentator), Sarada Publishing House, Chennai, May 2005.
2. Natrinai, A. Narayanasami Aiyar (Editor), The South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai, 1956.
3. Kalittokai, Naccinarkkiniyar (Commentator), The South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai, 1958.
4. Kuruntokai, Mu. Shanmugampillai (Editor), Tamil University, Thanjavur, 1974.
5. Natrinai: Text and Commentary, Avvai. S. Duraisamipillai, Aruna Publications, Chennai–17, 1968.
6. Sangam Literature, S. Vaiyapuri Pillai, Pari Nilayam, Chennai, 1967.
7. Sangam Literature – Akananuru (3 Volumes), A. Manickanar, Varthamanan Pathippagam, Chennai, 1999.
8. Sangam Literature – Ainkurunuru (2 Volumes), A. Manickanar, Varthamanan Pathippagam, Chennai, 1999.
9. Paripadal, Po. Ve. Somasundaranar, The South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai.
10. Natrinai Naanuru, Pinnathur Narayanasami Aiyar, The South India Saiva Siddhanta Works Publishing Society, 1956.